ஓய்வூதிய அறிவுறுத்தல்
கடித இல: 09/2021 2021.04.30

அனைத்து மாவட்ட செயலாளர்கள் மற்றும்
பிரதேச செயலாளர்கள்

<u>ஓய்வூதிய பெறுநர்கள் ஓய்வூதியம் பெற முடியாத சந்தர்ப்பங்களில் பாதுகாவலர் ஒருவரை நியமிப்பதற்கான ஒப்பந்தம்</u>

மேற்படி விடயம் தொடர்பான 11.06.2020 ஆந் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கை இல. 07/2020 மற்றும் 07.01.2021 ஆந் திகதிய ஓய்வூதிய அறிவுறுத்தற் கடித இல. 01/2021 இற்கு மேலதிகமாக பின்வரும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன.

I. பாதுகாலவரை நியமிப்பதற்கான பூரண அதிகாரம் பிரதேச செயலாளருக்கு வழங்கப்படுகின்றது.

II. ஒன்றுக்கு மேற்பட்ட பாதுகாவலர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டு ஏதேனும் சிக்கல்கள் ஏற்படின் பிரதேச செயலகத்தின் பரிந்துரையோடு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும் என்பதுடன் ஓய்வூதிய திணைக்களம் பாதுகாவலரை நியமனம் செய்யும்.

III. பாதுகாவலர் பரிந்துரைக்கப்பட்டதும், மாதாந்த ஓய்வூதிய வழங்கல் தரவுத்தளத்தை புதுப்பித்துக் கொள்ளும் பொருட்டு பாதுகாவலரின் விபரங்கள் உரிய மாதிரிபடிவத்திற்கு அமைய மையப்படுத்தப்பட்ட தரவுத்தளத்தின் AR மூலம் இணையவழியூடாக(online) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

IV. ஓய்வூதியர் முதியோர் இல்லம், ரணவிரு செவன போன்ற இடங்களில் தங்கியிருப்பவராகவும் பாதுகாவலர் வேறு ஒரு பிரதேச செயலகர் பிரிவில் வசிப்பவராகவும் இருப்பின், ஓய்வூதியரின் கோப்பு சம்பந்தப்பட்ட கொடுப்பனவினை மேற்கொள்ளும் பொருட்டு பாதுகாவலர் வசிக்கும் பிரதேச செயலகத்திற்கு மாற்றப்படவேண்டும்.அவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்தில், ஓய்வூதியர் மற்றும் பாதுகாவலர் இருவரும் ஒரே பிரதேச செயலகர் பிரிவில் வசித்தல் வேண்டும். அத்துடன் அப்பணத்தில் (சுயநினைவின்றி/அங்கவீகமுற்று மருத்துவமனையில் அல்லது முதியோர் இல்லத்தில் அல்லது ரணவிரு செவனவில் தங்கியிருக்கும்)ஓய்வூதியர் பாராமரிக்கபடுதல் தொடர்பாக மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பிரதேச செயலகத்திற்கு அறிக்கையிட வேண்டும் என்பதுடன் பிரதேச செயலாளரினால் மேற்பர்வை செய்யப்பட வேண்டும்.

V. கிராம சேவையாளரினால் வழங்கப்படும் மாதாந்த சான்றிதழின் அடிப்படையில், அஞ்சல் அலுவலகத்தின் ஊடாக பாதுகாவலரிற்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.

VI. ஏதேனும் விசேட நிலைமைகளில் ஓய்வூதியரின் ஓய்வூதியம் பாதுகாவலரின் வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்படலாம். இதற்காக பின்வரும் நடைமுறையினை பின்பற்றுதல் வேண்டும். வங்கியில் வைப்பிலிடுவதற்கான ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திடம் அனுமதி பெற்றுக்கொண்ட பின்னர் பாதுகாவலரின் வங்கி கணக்கு விபரங்கள் கடிதம் மூலம் பிரதேச செயலகத்தினால் ஓய்வூதிய திணைக்களத்தின் மாதாந்த ஓய்வூதிய . கொடுப்பனவு பிரிவிற்கு அனுப்பிவைக்கபடுதல் வேண்டும். (பாதுகாவலரின் வங்கிக்கணக்கிற்கு பணம் வைப்பிலிடுதல் அப்போதிருந்து ஆரம்பிக்கப்படுவதுடன் ஓய்வூதியரின் வங்கி கணக்கிற்கு பணம் வைப்பிலிடுதல் நிறுத்தப்படும்)

VII. ஓய்வூதியரின் ஓய்வூதியமானது அவரின் நலனுக்காக பாதுகாவலரினால் பயன்படுத்த வேண்டும். பாதுகாவலர் ஓய்வூதியரின் நலனிற்காக ஓய்வூதியத்தினை பயன்படுத்தாமை உறுதிப்படுத்தப்படின் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் தொடர்பாக பாதுகாவலர் அறிவுறுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

VIII. ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஓய்வூதியர்மரணமடைந்தால்பாதுகாவலரினால் உடனடியாக பிரதேச செயலகத்தின் ஊடாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும் என்பதுடன் பாதுகாவலரிற்கான கொடுப்பனவு உடனடியாக நிறுத்தப்பட்டு, ஏதேனும் தொகை செலுத்தப்பட்டிருப்பின் அது மீளஅறவிடப்பட வேண்டும்.

IX. பாதுகாவலர் மரணமடைந்தால், புதிய பாதுகாவலர் நியமிக்கப்பட்டு முன்னைய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஒப்பம்
ஏ. ஜகத் டீ டயஸ்
ஓய்வூதியப் பணிப்பாளர்நாயகம்

பிரதிகள்
1. கணக்காய்வாளர் நாயகம்
2. பணிப்பாளர்நாயகம், முகாமைத்துவகணக்காய்வுத் திணைக்களம்
3. பிரதான உள்ளக கணக்காய்வாளர் (ஓய்வூதிய திணைக்களம்)